# வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும் தினம் விரைவில் முடிவாகும்

(கொழும்பு)

வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நாள் எந்நேரமும் தீர்மானிக்கப்படலாமென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதி மீதான பாரிய தாக்குதல் ஒன்றுக்கான திட்டத்தை கூட்டுப்படைத்தளபதி ஹமில்டன் வனசிங்க தனக்கு விசுவாசமாயுள்ள உயரதிகாரிகளுடன் இணைந்து தயாரித்துள்ளார்.

இத்தாக்குதலை ஆரம்பிக்கும்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 19 இதழ் 267
யாழ்ப்பாணம் புதன்கிழமை 04 — 11 — 1992

## பெருமளவு படையினர் வடபகுதியில் குவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியிலிருந்து கடந்த சில தினங்களாக பெருமளவு படையினர் வடபகுதியில் குவிக்கப்பட்டு வருவதாகவும் படையினருக்கு தேவையான ஆயுதங்களும், இராணுவ தளபாடங்களும் உணவுகளும் கப்பல், விமானம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பனாகொட, தியத்தலாவ, இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் கொழும்புக்கு அழைக்கப்பட்டு அங்கிருந்து வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

வடக்கில் பாரிய தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் புலிகள் அதிரடி

# 23 படையினர் உயிரிழப்பு

## இரு சிப்பாய்களை காணவில்லை; ஆயுதங்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அறந்தலாவை கிராமத்தில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 23 சிறிலங்கா படையினர் பலியானார்கள். இருவர் காணாமற் போய்விட்டனர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் அறந்தலாவை கிராமத்தில் விமானப் படையினரும், பொலிசாரும் இணைந்து ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த போது விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் 13 விமானப் படையினரும், 10 பொலிசாரும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை புலிகள் தரப்பில் எவ்விதஇழப்புகளும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்-சிங்களக் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட ஒருசில நாட்களில் இத்தாக்குதல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தம்மை காக்கமுடியாத படை எப்படி முஸ்லிம்களை பாதுகாக்கும்?

(லண்டன்)

தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியாத பாதுகாப்புப் படையினர் எவ்வாறு முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்கப்போகிறார்கள் என்பதே முஸ்லிம் தலைவர்களுடைய இன்றைய மனஉளைச்சலாகும் என்று முஸ்லிம்கள் தரப்பில் பரவலாக தெரிவிக்கப்படுவதாக பி. பி. சி. தனது நேற்றைய செய்திக்கணிப்பில் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் தாக்குதலில் 20க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை யடுத்தே இந்த மன உளைச்சல் முஸ்லிம் தலைவர்கள் மத்தியில் எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## பௌத்த பிக்குகள் குழு மீண்டும் யாழ். விஜயம்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் தலைமையிலான 'சர்வமதக் குழு' ஒன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## "பல்கலைக்கழக சுற்றுடலை பாதுகாப்பு வலயமாக்கவும்"

### உயர் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்துமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் வண. ஏ. ஜே. வீ. சந்திரகாந்தன் உயர்கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வண. சந்திரகாந்தன் கடந்த வாரம் கொழும்பில் உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தை சந்தித்து மேற்படி வேண்டுகோளை விடுத்ததுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

அம் மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:

"யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் பல தடவைகள் விமானக்குண்டு வீச்சு நடைபெற்றது. இக்குண்டு வீச்சினால் பல்கலைக்

(4-ம் பக்கம் பார்க்க)

**காடின்றி மழையில்லை**
**காற்றின்றி உயிரில்லை**

## ★ யாழ். பல்கலைக்கழக மாணவர் பதிவுத் திகதி 9ம் திகதி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திற்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பதிவுத் திகதியை எதிர்வரும் 9ம் திகதி திங்கட்கிழமைவரை யாழ். பல்கலைக் கழகம் நீடித்துள்ளது.

மேற்படி திகதிக்கு முன்னர் பதிவு செய்யாத மாணவர்களின் வெற்றிடங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுமென யாழ். பல்கலைக் கழக பதிவாளர் அறிவித்துள்ளார். 159)

## லலித் கட்சியின் தமிழ் பத்திரிகை ஆசிரியர் சி.ஐ.டி.யினரால் விசாரணை

(கொழும்பு)

லலித்கட்சியின் பத்திரிகையான 'கருடன்' பத்திரிகை ஆசிரியரும் ஜனநாயக ஐக்கிய தேசிய தொழிலாளர் சங்க பொதுச்செயலாளருமான திரு. ராஜா திவ்யராஜன் சி. ஐ. டி. யினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமானை கடுமையாக விமர்சித்து எழுதியமைக்காகவே இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி யாரென இன்று தெரியும்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று சுறுசுறுப்பாக நடைபெற்றது.

1988-ம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 51 சதவீத மக்களே வாக்களித்தனர். ஆனால் இந்தத் தேர்

4ம் பக்கம் பார்க்க)

## விமான நடமாட்டம் அதிகரிப்பு

(தாளையடி)

வடமராட்சி-கிழக்குப் பகுதி வான் பரப்பில் விமானங்களின் நடமாட்டம் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன.

[4ம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறை இறங்குதுறை சேதம்

(புலோலி)

கடல் கொந்தளிப்பு காரணமாக பருத்தித்துறை இறங்குதுறையில் பலத்த சேதமேற்பட்டுள்ளது.

[ 4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நீம் சுகாதார தூபம்

"நுளம்புத் தொல்லை-மலேரியாக் காய்ச்சல் பரவுகிறது பத்திரிகைச் செய்தி. "நீம்" இருக்கப் பயமேன்? மில்வைற் அபயக்குரல் நீம் சுகாதார தூபம் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை தருகிறது. ஓர் இயற்கைப் பாதுகாப்பு அண்ணை கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க் வைற், யாழ்ப்பாணம்.
(எ-2562)

### விற்பனைக்கு

பொமனேரியன் (Lion cut) நாய்க்குட்டிகளும், பியானோவும் (Matzeler London) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். யோ. யோ. இராஜசிங்கம், இல. 9, பிளைச்சர் ஒழுங்கை, சுண்டிக்குளி மகளிர் பாடசாலை அருகாமை, சுண்டிக்குளி.
(சி-6950)

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் 1993 மாதிரிப் பரீட்சை 07-11-92 சனி மு. ப. 8-00, மு. ப. 11-00 (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். துரித மீட்டற் பயிற்சியையும் (விடைகளுடன்) மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
(சி-6949)


மாணவர்

## உணவு முத்திரை பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கட்கான உணவு முத்திரைக்குரிய பொருட்கள் இன்று 4-ம் திகதியிலிருந்து யாழ்ப்பாணப்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிக்கப்படவுள்ளன.

91ம் ஆண்டு செப்டம்பர் மாதம், 92ம் ஆண்டு ஏப்ரல் மே மாதங்கட்கான முத்திரைகளுக்கே பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (56)

## இராசி பலன்

**04-11-1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு ஐப்பசி 19)**

நவமி காலை 7-15 வரை, அவிட்டம் காலை 8-45 வரை மரணயோகம், இராகுகாலம் பகல் 12-04 முதல் 1-34 வரை, சுபநேரமான 4-34 முதல் 6-04 வரை.

மேஷம்; புதிய ஸ்தானம், மனமகிழ்ச்சி, தனலாபம்.

இடபம்: கல்வியால் பெருமை காரிய ஜயம். குடும்ப நன்மை.

மிதுனம்: பெண் கலகம், உஷ்ணவாதம், மன சஞ்சலம்.

கடகம்: மனக்கிலேசம், குடும்ப முரண்பாடு, பண முடை.

சிங்கம்: கருத்து மோதல். பணியாளர் நன்மை, பாராட்டு

கன்னி: மித்திர லாபம், மாதர் நன்மை, அயலவர் உதவி.

துலாம்: வீண்பழி, அநாவசிய தலையீடு, மனச்சுமை.

விருச்சிகம்: பயண சஞ்சலம் இனசன பகை. வெறுப்பு.

தனுசு: தெய்வ சிந்தனை, காரியசித்தி, பயனற்ற செலவு.

மகரம்: பலவழியில் களைப்பு வழிதவறுதல், அகால போஜனம்,

கும்பம்: செயல் திறமை, சமரச முயற்சி, குடும்ப சுகம்.

மீனம்: கைப்பொருள் இழப்பு. பெரியவர் பகை, அலைச்சல்.

— ஜோஸ்யர்

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 1993

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 டிசம்பர் 15 ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

1. எழுது பொருட்கள்
2. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம்-மரம்
4. அலுவலக சாதனங்கள் [ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன]
5. அலுவலக இயந்திரங்கள் [தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள் போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன]
6. சகலவகை ஹார்ட்வெயர் பெயின்டுகள், வார்னிஷ்
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருட்களும், கண்ணாடிப்பொருட்களும்
12. மரம்
13. கட்டடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன]
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுள்வேத மருந்துகள்
18 மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முத்லியன.
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப்பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் [தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
3. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்தவேலைகளும் பராமரிப்புக்களும்
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்தவேலைகள்
5. மரத்தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
6. கதிரைகள், பின்னல்
7. உடைகள். கதவு, யன்னல், திரைச்சீலைகளை தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளை சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவவெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:**

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின்மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மானித்தலும், திருத்த வேலைகளும்)
4. மின்சார வயறிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள் /கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
7. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வழங்கல்கள்/சேவைகள் 1993 எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.

2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/-பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/தபால் கட்டளையையும் இணைத்து அனுப்பவேண்டும்.

விலைமனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும் ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்கவேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன்வசதிகள்

குறிப்பு:- பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் கோரப்படுகின்றன.
எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

(அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின போட்டோப் பிரதி/ அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்)

(ஆ) ஏனையோர் ICTAD/ID/02 (இரு பிரதிகள்) ICTAD/ID/01 ஐயும் ICTAD, 123 விஜயராம மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்கவேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி/ வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டதிற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7இற்கு மட்டும்) தருக.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(எ-2529)

# வடமராட்சியில் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் ஊனமுற்றவர்களுடைய நிவாரணக் கொடுப்பனவுக்கான நடவடிக்கைகள், யாழ். அரச செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதியினரால் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் கீழ் இக்கொடுப்பனவு சம்பந்தமான கடமைகளுக்காக மேற்படி பிரிவின் உயரதிகாரிகளை உள்ளடக்கிய ஒருகுழு முதலில் பருத்தித்துறைப்பிரதேச செயலர் பணிமனைக்கு 7ம் திகதி சனிக்கிழமை செல்லவிருக்கின்றது.

பருத்தித்துறை பிரிவைச் சேர்ந்தவர்களில் வன்செயலால் ஊனமடைந்து தத்தமது கிராமசேவை உத்தியோகத்தர்களூடாக, கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணத்துக்கு விண்ணப்பித்தவர்களில் இதுவரையில் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் 7ம் திகதி சனிக்கிழமை காலை 9-00மணிக்கு மேற்படி பணிமனைக்கு வந்து தத்தமது கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக்கொள்ள, ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்றும் பின்வரும் ஆவணங்களைக் கொண்டுவர வேண்டுமென்றும் இக்குழு கேட்டுக்கொள்கிறது.

கிராம சேவகரால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், பொலித்தீன் உறையில் உள்ளடக்கப்பட்டு துவாரங்கள் இடப்பட்ட குடும்பப்பதிவு அட்டை, ரூபா 2/- பெறுமதியான தபால் தலை (முத்திரை).

இந்த நிவாரணத்தை ஏற்கனவே பெற்றுக்கொண்டவர்கள் வரத்தேவையில்லையென்றும், கொடுப்பனவு உறுதிச்சீட்டில் (வவுச்சர்) ஏற்கனவே கையொப்பம் இட்டவர்களின் நிவாரணம் காசோலைகள் மூலமாக இம்மாத இறுதிக்குள் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தனித்தனியாக கடிதமூலம் அறிவிக்கப்படுமென்றும், இவ்வாறான கடமைகளுக்காக ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் இக்குழு விரைவில் செல்லவுள்ளதென்றும் செயலக புனர்வாழ்வுப் பிரிவின் உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

[161]

## யாழ். செயலகத்திற்கு கொடுப்பனவு பற்றுச்சீட்டு அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் காரியாலயங்களில் இருந்து மாதாந்தம் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகள் பல மாதங்களாக அனுப்பி வைக்கப்படவில்லையென்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகள் உரிய நேரத்துக்கு யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படாததுடன் ப. நோ. சங்கங்களுக்கு கொடுக்கவேண்டிய கொடுப்பனவுகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் கொடுக்க முடியவில்லையென்றும் கூறப்படுகின்றது.

மேற்படி கொடுப்பனவு பற்றுச்சீட்டுகளை யாழ்ப்பாணம், சாவகச்சேரி, உடுவில், சண்டிலிப்பாய் பகுதி உதவி அரச அதிபர் பிரிவுகளே பெரும்பாலும் அனுப்பாது இருப்பதனால் ப. நோ. கூ. சங்கங்களுக்கு புனர்வாழ்வுப் பிரிவினால் வழங்கப்படும் உணவுப்பொருட்களின் விநியோகத்தில் மந்தநிலை ஏற்படலாமென்றும் யாழ். செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வி)

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு தீர்வையின்றி மோட்டார் சைக்கிள்கள் வழங்க உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் இணக்கம் தெரிவித்துள்ளார்.

விரிவுரையாளர்களின் போக்குவரத்து பிரச்னையை தணிக்கும் வகையில் இவர்களில் 50 பேருக்கு தீர்வையற்ற முறையில் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மோட்டார் சைக்கிள்களின் பாவனைக்கு போதிய அளவு மண்ணெண்ணெய் வழங்கவும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். (சி)

## தெய்வீகப்பேருரையாளருக்கு 'கந்தநிதி' பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி (முருகமூர்த்தி) கோவில் கந்தஷஷ்டி விரத காலத்தில் 7 தினங்களும் கந்தபுராண தெய்வீகப் பேருரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரும், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு மேற்படி தேவஸ்தானம் நிறைவு நாளன்று கந்தபுராணத்தை முற்றாக விரித்து பேருரை நிகழ்த்தியமையைப் பாராட்டி 'கந்த நிதி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

இவரை பாராட்டி யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கலைவாணி இராமநாதன், பண்டிதை திருமதி சின்னையா திரு. பாலசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

பேருரைகள் நிகழ்ந்த காலத்தில் பெருந்தொகையான பக்தர்கள் கூடி பயன் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சு. க. நாடாளுமன்ற குழுத் தலைவரை மாற்ற கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் எதிர்க்கட்சிக் கொறடாவுமான றிச்சட்பத்திரனையை நீக்கிவிட்டு அவரது இடத்திற்கு ஜனாப் ஹலீம் இஷாக்கை நியமிப்பதற்கு அநுரா குழுவினர் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்தில் ஏற்கனவே 20 எம். பிக்கள் கையொப்பம் இட்டுள்ளதாகவும் மேலும் 16 எம். பிக்களின் கையொப்பத்தைப் பெற முடியும் என்றும் எம்.பி. ஒருவர் கூறினர். (க)

## நள்ளிரவில் தொடரும் கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு- தம்பாலைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் தொண்டமானாறு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடந்த சில தினங்களாக கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இரவு 8-30 மணியளவில் படையினர் முகாம்களிலிருந்து தொடர்ச்சியாக பல மணிநேரமாக ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நள்ளிரவுக்குப் பின்னரும் தொண்டமானாறுப் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் ஏற்கனவே மக்கள் சொந்த இடங்களிலி

(4-ம் பக்கம் பார்க்க)

## போரூட் ஸ்தாபனத்தாரால் 50 குடும்பங்களுக்கு 50 வீடுகள் கையளிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியில் சுழிபுரம் போரூட் ஸ்தாபனத்தினரால் 50 குடும்பங்களுக்கான 50 வீடுகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளன.

தனித்தனி வீடுகளாக அமைக்கப்பட்டுள்ள இந்த 50 வீடுகளும் சீற்ஓட்டினால் வேயப்பட்டுள்ளன.

இந்த 50 வீடுகளிலும் அகதிகளாக இருந்த மாதகல் சில்லாலைப் பகுதி மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சுகாதார வசதிகளையும் குடிநீர் வசதிகளையும் செய்து கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை போரூட் ஸ்தாபனம் மேற்கொண்டு வருகிறது. (139)

## முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்புப் பெறும் மகளிர் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால், அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும்முகமாக "மகளிர் பொற்கணக்கு" சிக்கன திட்டப் போட்டி முடிவுத் திகதி இம்மாதம் 30-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி மேற்தரக் கிளை பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: கிளின்ரன் வெற்றிபெறுவார் வாஷிங்டன்போஸ்ட் ஆருடம்

[நியூயோர்க்]

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில் கிளின்ரனுக்கே வெற்றிவாய்ப்புகள் அதிகம் உள்ளதாக 'வாஷிங்டன் போஸ்ட்'' நடத்திய தனது இறுதிக்கணிப்பீட்டில் தெரிவித்துள்ளது.

அச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்; மொத்தமாக உள்ள 60 மாநிலங்களில் 10 மாநிலங்களில் திரு. கிளின்ரனுக்கு உறுதியான பெரும்பான்மை உள்ளதாகவும் மற்றும் 15 மாநிலங்களில் ஓரளவு பெரும்பான்மை உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் திரு. கிளின்ரன் ஜனாதிபதி புஷ்ஷைவிட புள்ளிகள் எண்ணிக்கை வித்தியாசத்தை மிகவும் அதிகரித்துச் செல்வதாகவும் அச்சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. (க)

## யு. எஸ். உதவி திட்டத்தில் இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை

(உடுவில்)

யு.எஸ். உதவித்திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டத்துக்கு விவசாயிகளை தெரிவுசெய்யும் போது இடம்பெயர்ந்துள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

யு எஸ் உதவித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுமார் ஏழாயிரத்து ஐநூறு விவசாயிகள் தெரிவுசெய்யப்பட உள்ளனர்

உதவித்திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள விவசாயிகளையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமே தெரிவு செய்யும். இத்தெரிவின்போது இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரியவருகின்றது.

தெரிவு செய்யப்படும் விவசாயிகளுக்கு பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக விதைநெல், விதைதானியம், உரம், கிருமிநாசினிகள், மண்வெட்டிகள். நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றன வழங்கப்படவுள்ளன. (190)


# SRI LANKA RED CROSS SOCIETY,

## JAFFNA BRANCH.

APPLICATIONS ARE INVITED FOR THE FOLLOWING POSTS

| Post | Qualification required |
|---|---|
| 1. Doctor | MBBS/RMP/AMP |
| 2. Dispenser | G.C.E (O/L) with experience in dispensing. |
| 3. PHI | PHI certificate/ Public Health Certificate from National Institute of Health. |
| 4. Nurse | Certificate from approved Nurses's training school |
| 5. Primary Health care Programme Officer. | Public Health Certificate and experience in Primary Health Care |
| 6. Radio Operator | PMG licence / City & Guild certificate in wirelsss operations. |
| 7. Project Officer Youth affairs & Public support affairs | A/L, credit pass in English in O/L and experience in youth affairs and public relations. |
| 8. Steno - Typist (English) | O/L, with credit pass in English and experience in office work, and stenography. |

(Retired persons also can apply)

APPLICATIONS SHOULD BE SENT TO THE UNDERMENTIONED ON OR BEFORE 16 - 11 - 92.

DATE OF INTERVIEW FOR 1 - 5: 28 - 11 - 92 (10- 00 A. M)

DATE OF INTERVIEW FOR 6 - 8; 21 - 11 - 92 (10- 00 A. M)

There will be no individual intimation for interview

HONY. SECRETARY

73, Kandy Road,
Jaffna. 03 - 11 - 1992.

(A-2563)

# ஐ. தே. க.வில் மீண்டும் சேரவுள்ள றெனி டி மெல்லுக்கு பிரதமர் பதவி வழங்க முடிவு?

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் மீண்டும் ஐ. தே. க.வில் சேரவிருப்பதாகவும் இவருக்கு பிரதமர் பதவியுடன் கூடிய நிதி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: தற்போது லண்டனிலிருக்கும் திரு. றெனி டி. மெல் அடுத்த மாதம் ... திகதி இலங்கை திரும்பவுள்ளார். இங்கு அவர் மீண்டும் ஆளும் கட்சியுடன் இணைவார்.

திரு. றெனி டி மெல் ஜெயவர்த்தன அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த போது இடம்பெற்ற பல மோசடிகள் தொடர்பாக இவர் மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளையும் வாபஸ் பெறுவதாக ஆளும் கட்சியினர் உறுதியளித்துள்ளனராம்.

அரசுடன் திரு. றெனிக்கு மீண்டும் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் முன்னாள் அரசியல்வாதியும் தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடொன்றில் ராஜதந்திரியாகவிருக்கும் ஒருவர் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளாராம்.

இந்த இணக்கத்தை அடுத்தே அண்மையில் லலித் கட்சியிலிருந்து திரு. றெனி டி. மெலின் மனைவி திருமதி மல்லிகா டி. மெல் ராஜினாமா செய்தாராம். (சி)

---

### வடபகுதியில் பாரிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதியை நிர்ணயிப்பதற்காக கடந்த மாதம் 27ம் திகதி பாதுகாப்பு உயர்நிலை மாநாடு கொழும்பில் கூட்டித்தீர்மானிக்கப்பட இருந்தது.

ஜனாதிபதியின் ஊவா மாகாண விஜயமும், பிரதமர், படைத்தளபதிகள், கூட்டுப்படைத் தளபதியின் வடக்கு-கிழக்கிற்கான சூறாவளிப் பயணங்களாலும் இக்கூட்டம் குறிப்பிட்ட திகதியில் நடைபெறவில்லை.

வடபகுதிக்கு விஜயம்செய்த மேற்படி குழுவினர் இராணுவ நடவடிக்கை பற்றி பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராய்ந்தனர், இராணுவநடவடிக்கையால் அகதிகளாவோரின் புனர்வாழ்வு நடவடிக்கைக்காக யாழ். மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு பெருமளவு நிலப்பகுதியைக் கைப்பற்றுவதன்மூலம் தனது செல்வாக்கை உயர்த்த ஹமில்டன் வனசிங்கா திட்டமிட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

---

### "பல்கலைக்கழக சுற்றுடலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்துக்கு சேதம் ஏற்படாத போதிலும் எமது கடமைகளுக்கு அது பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக யாழ் பல்கலைக்கழகம் பெரும் கஷ்டங்களையே அனுபவித்து வருகின்றது. எமது ஆய்வுகளுக்குத் தேவையான இரசாயனங்கள், மின்சாரம், எரிபொருள், நிர்வாகத்துக்கு தேவையான காகிதாதிகள் போதியளவு கிடைக்காததினால் ஆய்வுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு தொலைபேசி இணைப்பு இல்லை. போக்குவரத்துவசதியீனங்களால் யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் நடைபெறும் கருத்தரங்குகளில் பங்குபற்ற முடியாது இருக்கின்றது. இதனால் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் குறைந்தது இரு ஆசனங்களாவது, யாழ். பல்கலைக்கழகத்துக்கென ஒதுக்கப்படவேண்டும்.

இதேவேளை யாழ்ப்பாணம்-கொழும்பு பயணத்துக்கென பொதுமக்கள் பயன்படுத்தும் கிளாலிப் பாதை படகுச்

---

# ஜெயலலிதாவுக்கு எதிராக விசாரணைக் கமிஷன்

(புதுடில்லி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அரசு அதிகாரத்தைத் தவறுகப் பயன்படுத்தினர் என்பதை விசாரிக்கவிசாரணைக்கமிஷன் அமைக்கவேண்டுமென்கோரும் மனுஒன்றை ஜனதா கட்சித்தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தலைமையிலான குழு நேற்று ஜனதிபதி சங்கர் தயாள் சர்மாவிடம் கையளித்தனர்.

ஜெயலலிதா ஆட்சியில் நடைபெறும் சகல எதேச்சாதிகாரமும் இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது மனுவுக்கு தக்க பதில் கிடைக்கத்தவறினால் பெரும் போராட்டமொன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். (சி)

---

### பெருமளவு படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை ஆரம்பிக்கவே இந்த ஏற்பாடுகள் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

---

### நள்ளிரவில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து இடம் பெயர்ந்துள்ளதனால் உயிர்ச் சேதங்கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டுள்ளது. (56)

---

### விமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியிலிருந்து வெற்றிலைக்கேணி, ஆனையிறவு இராணுவ முகாம்களுக்கு இரவு பகல் வேளைகளில் ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி சென்றுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (163)

---

### அம்பாறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறந்தலாவையில் பாதையைச் செப்பனிடும்பணியில் விமான மற்றும் பொலிஸ் படையினர் ஈடுபட்டிருந்த வேளையிலேயே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு படையினர் உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி-க)

---

### பௌத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளை சந்தித்து பேச்சுகள் நடாத்தவுள்ள இக்குழுவினர் புலிகளின் பாதுகாப்பிலுள்ள பொலிசாரின் விடுதலை குறித்தும் பேசவுள்ளனராம்.

புலிகளுடனான சந்திப்பின் போது தெரிவுக்குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க முன்வைத்த யோசனை குறித்தும் இக்குழு பேச்சுக்களை நடாத்துமெனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

சேவையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும். அத்துடன் தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளையும் பாதுகாப்புப் பிரதேசமாசப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் வண. சந்திரகாந்தனின் மகஜரை ஆராய்ந்த அமைச்சர் ஹமீத் இவற்றுக்கு விரைவில் நிவாரணம் வழங்குவதாகப் பதிலளித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (வி)

---

# பொலிஸ் பதவி உயர்வுகள் குறித்து தமிழ் முஸ்லிம் அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் கூடிய பாதுகாப்பு அமைச்சு மாநாட்டில் 24 மணி நேரத்தில் 29 பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டது. இந்த விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதம மந்திரியும், பாதுகாப்பு அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்காவின் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வைத்தே இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதாகவும், பதவியுயர்வு பெற்ற 29 பொலிஸ் அதிகாரிகளும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

மேற்படி பதவி உயர்வு பெற்ற 29 சிங்கள பொலிஸ் அதிகாரிகளை விட அனுபவமும், திறமையும், தகுதியும் வாய்ந்த தமிழ், முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் இருந்தும் அவர்கள் அனைவரும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட தமிழ் முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சிடம் தமது கடும் ஆட்சேபனைகளைத் தெரிவித்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

### லலித் கட்சியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சி. ஐ. டி. பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இவரின் உதவியாளரான கவிஞர் மலைத்தம்பி கடந்த சனிக்கிழமை இலக்கத் தகடு இல்லாத வெள்ளை நிறலான்சர் காரில் வந்த நான்கு சிவில் உடைக்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். (சி)

---

### அமெரிக்காவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலில் 55 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்களிப்பு இலங்கைநேரப்படி நேற்றுமாலை 4-30மணிக்கு ஆரம்பமானது. இன்று அதிகாலை 4 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதல் தேர்தல் முடிவுகள் இன்று காலை ஆறு மணியளவில் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி யாரென்பது இன்று காலை பத்து மணியளவில் தெரிந்துவிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில் கிளிங்ரன் வெற்றிகொள்ளலாமெனப் பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

# 70 நோயாளருடன் குமண புறப்பட்டது

(புலோலி)

அவசர சிகிச்சைக்காகக் கொழும்பு செல்லும் 79 நோயாளர்களை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் நேற்று மாலை மீண்டும் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற்ற 72 நோயாளர்களை திருகோணமலையிலிருந்து ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பல் மீண்டும் நாளை வியாழக்கிழமை பருத்தித்துறை வந்து எஞ்சிய பொருட்களை இறக்கிவிட்டுத் தபால் பொதிகளை ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் செல்லுமென தெரிவிக்கப்படுகிறது. (61-56-159)

---

# ஷெல் தாக்குதலினால் மக்கள் இடம் பெயர்வு

(மானிப்பாய்)

வடலியடைப்பு பகுதியில் அடிக்கடி இடம்பெற்றுவரும் ஷெல் தாக்குதல்களினால் அப்பகுதியில் குடியிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி சென்றுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள குடிமனைகளை நோக்கி கடந்தசில நாட்களாக பலாலி மாதகல் பகுதிகளிலிருந்து இரவு வேளைகளில் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றது. கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலின் போது அரசடி வீதியிலுள்ள பெண்மணி ஒருவர் சிறு காயத்திற்குள்ளானார்.

இதனால் இங்குள்ள மக்கள் தற்போது வட்டுக்கோட்டை, நவாலி, மானிப்பாய், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் சென்று தங்கியுள்ளனர். (71)

---

# மெரினா கப்பலில் உரம் வந்தது

(புலோலி)

காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் மெரினா கப்பல் எதிர்வரும் 7-ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தில் கெயர் நிறுவனத்துக்கென கொண்டுவரப்பட்ட உரவகைகளை இறக்கவுள்ளது.

குமணக்கப்பலில் இருந்து பொருட்களை இறக்கவேண்டியிருந்ததால் மெரினா கப்பலிலிருந்து உரம் இறக்குவதில் தாமதம் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (61)

---

# மாணவர் முத்திரைகளுக்கு உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைகளுக்கு நேற்று முதல் யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகள் அனைத்திலும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய உணவுமுத்திரைகள் வழங்கப்பட்ட போதிலும் இரண்டு மாதங்களுக்குரிய உணவுப் பொருட்கள் மட்டுமே தற்போது வழங்கப்படுகின்றன

இம்முத்திரைகளுக்கு குரக்கன் மா, அரிசி போன்ற பொருட்கள் வழங்கப்படுகின்றன. (வி)

---

# இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல்விக் கூடம் நடாத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் உரையாற்றுவார்.

---

### பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கரையிலிருந்து சிறிது தூரம் கடலுக்கு செல்லும் பாதையான இறங்குதுறை கடல் கொந்தளிப்பினால் சுமார் 5 அடிக்கு மேல் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் பொருட்களை இறக்குவதில் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (61)

---

ஆண்டு 6க்கான

# அனுமதி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியினால் ஆண்டு 6க்கான அனுமதிப்பரீட்சை நவம்பர் மாதம் 14ம் திகதி நடாத்தப்படவுள்ளது. விண்ணப்பம் நவம்பர் 4ம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கப்படவேண்டும். (சு)

---

# இரத்தம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் உள்ள இரத்த வங்கியில் இரத்தப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் விடுதிகளில் அத்தியாவசியமாக ஏற்றப்படும் நோயாளர்கட்கு வங்கியில் இரத்தம் இல்லாநிலையேற்பட்டுள்ளதாக இரத்த வங்கி வைத்தியப் பொறுப்பதிகாரி திருமதி றஞ்சி இராஜராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரத்தம் வழங்க விரும்புவோர் உடன் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (56)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8